

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (9.7.2024) அமெரிக்கா, பால்டிமோர் நகரத்தில் உள்ள உலகப் புகழ்பெற்ற ஜான் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகத்தில் மாணவர்களிடையே தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய சிறப்புக்குரிய மருத்துவத் திட்டங்கள் பற்றி வகுப்பறையில் உரையாற்றினார். இந்நிகழ்வில் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழக துணைவேந்தர் மரு. நாராயணசாமி மற்றும் ஜான் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழக பேராசிரியர்கள், மாணவர்கள் உடன் இருந்தனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், பாரீஸில் நடைபெற உள்ள பாரா ஒலிம்பிக் 2024 – ல் மகளிருக்கான 67 கிலோ எடைப் பிரிவு பளுதூக்கும் போட்டிக்குத் தேர்வாகியுள்ள கஸ்தூரி ராஜாமணியை, நேற்று நேரில் சந்தித்து வாழ்த்தினார். “தமிழ்நாட்டிலிருந்து ஒலிம்பிக்கில் களம் காணும் 16 ஆவது நபராக தேர்வாகியுள்ள வீராங்கனை கஸ்தூரி ராஜாமணியின் விமானப் பயணச் செலவு – தங்குமிடம் – உணவு – பயிற்சி மற்றும் இதர செலவுகளுக்காக ரூ.7 லட்சத்திற்கான காசோலையை தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையில் இருந்து வழங்கினோம். தங்கை கஸ்தூரி ராஜாமணி சர்வதேச அரங்கில் வெற்றி வாகை சூடி இந்தியாவிற்கும் – தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்க்கட்டும். என அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்த்தியுள்ளார். இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல்யமிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் – செயலர் ஜெ.மேகநாத ரெட்டி ஆகியோர் உடன் உள்ளார்கள்.

### ரூ.8.14 கோடி மதிப்பில் – பொதுப்பணித்துறை மூலம் – கேரள மாநிலம் – வைக்கத்திலுள்ள

# தந்தை பெரியார் நூலகத்தில் புனரமைப்புப் பணிகள் - புதிய நூலகம் அமைக்கும் பணி !

## தமிழ் வளர்ச்சி – செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு !

வைக்கம் (கேரளா), ஜுலை 11-

கேரள மாநிலம், வைக்கத்திலுள்ள தந்தை பெரியார் நினைவகத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் ரூ.8.14 கோடி மதிப்பீட்டில் பொதுப்பணித்துறையின் மூலம் நடைபெற்று வரும் புனரமைப்பு பணிகள் மற்றும் புதிய நூலகம் அமைக்கும் பணிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அதன் விவரம் வருமாறு:-

கேரள மாநிலம், கோட்டயம் மாவட்டம், வைக்கத்திலுள்ள தந்தை பெரியார் நினைவகத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில், ரூ.8.14 கோடி மதிப்பீட்டில் பொதுப்பணித்துறையின் மூலம் நடைபெற்று வரும் புனரமைப்புப் பணிகள் மற்றும் புதிய நூலகம் அமைக்கும் பணிகளை நேற்று (9.07.2024) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறைச் செயலாளர் முனைவர் இல.சுப்பிரமணியன், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் செல்வராஜ், உதவி செயற்பொறியாளர்கள் சதீஷ்குமார், மோகனகிருஷ்ணன், தமிழ்நாடு அரசின் கேரள மாநில தொடர்பு அலுவலர் ஆர். உண்ணிகிருஷ்ணன் ஆகியோர் உடனிருந்தனர்.

பின்னர் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

1924ஆம் ஆண்டு வைக்கத்தில் உள்ள கோயிலைச் சுற்றிலும் அமைந்துள்ள தெருக்களில் ஒடுக்கப்பட்டவர்கள் நடப்பதற்கு இருந்த தடைகளை நீக்கக்கோரி நடந்ததுதான் வைக்கம் போராட்டம். இதற்காக அப்பகுதி தலைவர்கள் போராட்டம் நடத்தினார்கள். முக்கிய தலைவர்கள் கைதான நிலையில் போராட்டத்தை தொடர்ந்து, தந்தை பெரியார் அவர்கள் வைக்கம் சென்று அந்தப் போராட்டத்திற்கு தலைமை ஏற்று நடத்தினார்.

அதன் நினைவாக, 1985 ஆண்டு கேரளா அரசு வழங்கிய நிலத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் வைக்கத்தில் தந்தை பெரியார் நினைவகம் அமைக்கப்பட்டது. மேலும், அங்கு தமிழ்நாடு அரசின் சார்பில் நூலகம், அவர் பயன்படுத்திய பொருட்கள், அவருடைய வாழ்க்கை வரலாறு குறித்த புகைப்படங்கள், வைக்கப்பட்டிருந்தது. நினைவகம் கட்டப்பட்டு நீண்ட ஆண்டுகள் ஆனதால், அதனை இன்றைய கால கட்டத்திற்கு, ரூ.8.14 கோடி மதிப்பீட்டில் புனரமைக்க தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள். இப்புனரமைப்பு பணிகளுடன், அதிக புத்தகங்களை கொண்டதாக நூலகம் விரிவுபடுத்தப்பட்டு அமைக்கப்படவுள்ளது.

மேலும், பெரியாரின் வாழ்க்கை வரலாறு தொடர்பாக விடுபட்டிருந்த புகைப்படங்களும் அமைக்கப்படவுள்ளது. காலத்தால் அழியாத ஒரு நினைவு சின்னமாக விளங்கும் வகையில் இதனை அமைப்பதற்கான காரணம், கோயிலில் ஒரு குறிப்பிட்ட சமூகம் நுழையக்கூடாது என அந்தக் காலத்தில் அறிவித்திருந்த சமயத்தில், மகாத்மா காந்தி அவர்களின் உத்தரவை ஏற்று தந்தை பெரியார் அவர்கள் வைக்கம் போராட்டத்தில் கலந்துகொண்டார். இது ஒரு சமூக நீதிப் போராட்டமாகக் கருதப்படுகின்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, வைக்கத்தில் அமைந்துள்ள தந்தை பெரியார் நினைவகத்தில் நடைபெற்று வரும் புனரமைப்புகள் பணிகள் மற்றும் புதிய நூலகம் அமைக்கும் பணிகள் இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. ஏறத்தாழ 95 சதவீதம் பணிகள் முடிவடைந்து விட்டன. பெயிண்டிங், மின் இணைப்புப் பணிகள் மழையின் காரணமாக தாமதம் ஆகியுள்ளன. விரைவில் இப்பணிகள் முடிக்கப்பட்டு, வருகின்ற ஆகஸ்ட் மாதம் 15ஆம் தேதிக்குள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்படவுள்ளது.

இவ்வாறு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் தெரிவித்தார்.

### கனடாவில் பன்னாட்டு இலக்கியத் திருவிழா!

## கவிப்பேரருவி ஈரோடு தமிழன்பன் எழுதிய கவிதைகளின் பெருந்தொகுப்பு வெளியீடு!

### கலாநிதி நா.சுப்ரமணியன் சிறப்புரை! தி.அமிர்தகணேசன் பங்கேற்பு!

ஸ்கார்பரோ, ஜுலை11-

தமிழ் எழுத்தாளர் இணையம், கனடா மற்றும் ஒருதுளிக்கவிதை, புதுச்சேரி இணைந்து நிகழ்த்தும் “பன்னாட்டு இலக்கியத் திருவிழா 2024” 14.07.2024 அன்று மாலை 4.00 மணியளவில் மெக்னிகோல் அவென்யூ தொகுப்பு 8, ஸ்கார்பரோவில் நடைபெறுகிறது.

கவிப்பேரருவி ஈரோடு தமிழன்பன் அவர்களின் 90 ஆம் பிறந்தநாளை முன்னிட்டு, கலைமாமணி தி.அமிர்தகணேசன், (புதுச்சேரி) தொகுத்துள்ள கவிப்பேரருவி ஈரோடு தமிழன்பன் அவர்கள் எழுதியுள்ள 87 கவிதை நூல்களின் பெருந்தொகுப்பான “எரிதழலும் இளங்காற்றும்,” எனும் நூலையும் “நம்கால மகாகவி” எனும் நூலையும் கனடா, அமெரிக்கா, சிங்கப்பூர், இந்தியா நாடுகளின் படைப்பாளர்கள் எழுதியுள்ள நூல்களையும் வெளியிட்டு, கலாநிதி நா.சுப்ரமணியன் சிறப்புரையாற்றுகிறார்.

இதில் தி.அமிர்த கணேசன், அகணி சுரேசு, சிவன் இளங்கோ, ஆர்.என். லோகேந்திரலிங்கம், சிவா. இரட்ணசிங்கம், பாஸ்கரன், சின்னத்துரை,உமை பற்குணரஞ்சன், முனைவர் செல்வநாயகி ஸ்ரீதாஸ், இராஜ்மீரா இராசையா (கனி விமல்நாதன்), முனைவர். வாசுகி, நகுலராசா, க. சண்முகலிங்கம், முனைவர் சம்பந்தம், ஏகாம்பரம், பேராசிரியர் செ.இரா செல்வகுமார், சிவபாலு ஆகியோர் பங்கேற்கின்றனர்.


